இயக்குநர் (மு.கூ.பொ.), பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை,

சென்னை-6 அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : திரு.கா.ராமகிருஷ்ணன், எம்.ஏ.(பொரு.), எம்.ஏ.(பொது நிர்.), டி.எல்.எல்.

எண். 43633/இ4/2015 நாள்: 24.11.2023

பொருள் : பணியமைப்பு – பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, சென்னை-6 – திரு.எஸ்.ஸ்ரீநாத், இளநிலை உதவியாளர், துறைத் தலைமையிடம் – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை :
1) அரசாணை(டி) எண். 6, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ.3) துறை, நாள்: 11.10.2018.
2) துறை செயல்முறை ஆணை எண். 43633/இ4/2015, நாள்: 29.09.2022.
3) அரசுக் கடித எண். 903/பு.இ.3/2023, நாள்: 01.11.2023.
4) அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (Q1) துறை, நாள்- 08.03.2023.

***********

ஆணை:

பார்வை 2-ல் காணும் துறை செயல்முறை ஆணையின்படி, துறைத் தலைமையிடத்தில் புள்ளிஇயல் ஆய்வாளராகப் பணிபுரிந்த போது 23.10.2009 அன்று இயற்கை எய்திய திரு.எஸ்.சீனிவாசன் என்பவரின் மகனும் மூன்றாவது வாரிசுதாரருமான **திரு.எஸ்.ஸ்ரீநாத்** என்பவருக்கு, அவரது தகுதியின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு மாநில மற்றும் சார்நிலைப் பணி பொது விதி 10 (அ) (1)-ன் கீழ், தமிழ்நாடு அமைச்சுப் பணியில் ரூ.19,500 – 71,900/- (நிலை – 8) என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிக இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு, 06.10.2022 முற்பகல் முதல் துறைத் தலைமையிடத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். தனியர், தமிழ்நாடு அமைச்சுப்பணிக்கான சிறப்பு விதிகளின்படி இளநிலை உதவியாளர் பதவிக்குரிய அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளார்.

எனவே, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தற்காலிக இளநிலை உதவியாளராக துறைத் தலைமையிடத்தில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.எஸ்.ஸ்ரீநாத் என்பவரது பணியினை, தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 06.10.2022 **முற்பகல் முதல் பணிவரன்முறைபடுத்தி** ஆணையிடப்படுகிறது.

(ஒம்/-) கா.ராமகிருஷ்ணன்

இயக்குநர் (மு.கூ.பொ.)

<u>பெறுநர்</u>

திரு.எஸ்.ஸ்ரீநாத்,

இளநிலை உதவியாளர்,

துறைத் தலைமையிடம்.

<u>நகல்</u>

1) சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.

2) கணக்குப் பிரிவு - பட்டியல்

3) முக்கிய ஆணைத் தொகுப்பு / தனி / பணிப்பதிவேடு

// ஆணைப்படி அனுப்புவது //

24/11/23

புள்ளிஇயல் உதவி இயக்குநர்

24.11.23